ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ තානාපති කාර්යාලය - රුසියානු සමූහ මණ්ඩලය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தூதராலயம் - ரஷ்யா சமஷ்டி அரசு
EMBASSY OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA IN THE RUSSIAN FEDERATION

# பத்திரிக்கை அறிக்கை

## இவ் வருடமும் ரஷ்ய மற்றும் சோவியத் ஒன்றிய நாடுகளில்உல்லாசப் பிரயாண பிரசார நிகழ்வுகள் பல.......

கடந்த வருடம் ரஷ்யாவில் தேர்தெடுக்கப்பட்ட நகரங்கள் பலவற்றிலும் மற்றும் பெலோரஷ்யா,யுக்ரேன் நாடுகளில் நடை பெற்ற உல்லாசப் பயண பிரசார நடவடிக்கைகளில் கிடைத்த வெற்றியின் பலனாக ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதூதரகம், இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி பணியகத்தின் பூர்ண ஒத்துழைப்புடன் அவ்வாறான பல நிகழ்வுகளை இவ் வருடமும் ரஷ்யா,ஆர்மேனிய,பெலோரஷ்யா,யுக்ரேன் மற்றும் மொல்தோவியா தேசங்களில் தேர்தெடுக்கப்பட்ட நகரங்கள் பலவற்றில் நடை பெற ஏற்பாடு செய்துள்ளது. முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளான தற்போது சுயாதீன நாடுகளாக செயற்படும், இவ் நாடுகளின் இலங்கை தூதரகமாக செயற்படுவது, ரஷ்யாவிலே மொஸ்கோவ் நகரிலே அமைந்திருக்கும் இலங்கை தூதரகமாகும்.

இவ் வருட பிரசார நிகழ்வுகளில் முதற் கட்ட நிகழ்வுகள் ரஷ்ய மற்றும் ஆர்மேனிய நாடுகளில் நடைப் பெற சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், இந் நிகழ்வுகள் 2014 மே மாதம் 29ம் திகதி மொஸ்கவ் நகரிலே ஆரம்பிக்க நியமிதம். மூன்று தினங்கள் நடைப் பெறவிருக்கும் இந் நிகழ்விலே, இலங்கை கலாச்சார நடனங்கள், உல்லாசப் பயண ஒழுங்கமைப்பாளர்களுக்கான கருத்தரங்குகள், இலங்கை தொடர்பான புகைப்படக் கண்காட்சிகள், ஆயுர்வேத மற்றும் கைத்தொழில் பாசறைகள்,போன்றன இடம் பெறவுள்ளன.

இதன் பின் கசான்,சமார,சராதொவ்,வோல்கோகரத், பிரசித்த தோன் நதிக் கரை நகரமான இரஷ்தொப் போன்ற ரஷ்ய நகரங்களிலே இந் நிகழ்சிகள் நடைபெறுவதுடன் ஆர்மேனியாவிலே 2014 ஜூன் 16 திகதி நடை பெரும் இறுதி நிகழ்ச்சியுடன் முதல் கட்ட நிகழ்வுகள் நிறைவு பெற உள்ளது. இலங்கையின் புகழ் மிகு நடன குழுக்கள் வழங்கும் கண்கவர் நடன நிகழ்சிகள் சகல நகரங்களின் பிரதான கடைத் தொகுதிகளிலும், வெட்ட வெளித் திடல்களிலும் நடைப் பெறுவதுடன் இவற்றினை கண்டுக்களிக்க வரும் வெளிநாட்டவர்களுக்கு இலங்கை தேநீரின் சுவையை

ПОСОЛЬСТВО ДЕМОКРАТИЧЕСКОЙ СОЦИАЛИСТИЧЕСКОЙ РЕСПУБЛИКИ ШРИ ЛАНКА В РОССИЙСКОЙ ФЕДЕРАЦИИ
Ulitsa Shepkina - 24 Moscow 129090 Russia. www.srilankaembassy.org Россия, 129090 Москва, Ул.Щепкина, 24
Telephone: +7 495 688 1620, 688 1651, 688 1463 Fax: +7 495 688 1757 E-Mail: moscow@srilankaembassy.org

உணரக்கூடியவாரு இலவசமாக தேநீர் வழங்கப்படவுள்ளது. இந்த நிகழ்வுகள் தொடராக மூன்று வாரங்கள் சகல நிகழ்சிகளும் உள்ளடங்கலாக நடைபெற உள்ளமை சிறப்பம்சமாகும்.அதேசமயம் நகரங்களை தேர்தெடுக்கும் போது மக்கள் தொகை ஒரு மில்லியனுக்கு மேலாக வசிக்கும் நகரங்கள் தேர்தெடுக்கப்பட்டதுடன் அந் நகரங்களில் இருந்து இலங்கைக்கு விமான பயண வசதியுள்ளமை பற்றியும் கருத்தில் கொள்ளப்பட்டது.

இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி பணியகத் தரவுகளுக்கமைய 2013ம் வருட ஏப்ரில் மாதத்தை விட 2014ம் வருடம் ஏப்ரில் மாதம் இலங்கைக்கு வருகைத் தந்த உல்லாசப் பயணிகளின் தொகை 39.5% வீதம் அதிகரித்துள்ளது. ரஷ்யா மற்றும் சோவியத் ஒன்றிய நாடுகளில் இருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகளின் தொகையும் இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இவ் வருட முதல் நான்கு மாதங்களில் மட்டும் ரஷ்யாவிலிருந்து வருகை தந்த உல்லாசப் பயணிகளின் தொகை 81.1.% அதிகரித்துள்ளமை இதற்க்கு சான்றாகும்.

இலங்கைத் தூதுவரலயம்
மொஸ்காவ், ரஷ்யா
2014 மே 8 ம் திகதி